II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No.414 of 2019**

Deposition of witness for the Defendant / DW1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 04.02.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Deizy Rani | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

எனக்கு 2001 ம் ஆண்டு அருள்மணி என்பவருடன் திருமணம் ஆனது என்றால் சரிதான். எங்கள் இருவருக்கும் ஆகாஷ் என்கிற ஆண் குழந்தை உள்ளார். எங்களுக்கு குழந்தை பிறந்து 45 நாட்களில் 24.08.2002 ல் அருள்மொழி இறந்துவிட்டார். அதன் பிறகு 2012 ம் ஆண்டு வாசன் என்பவருடன் திருமணம் ஆனது என்றால் சரிதான். வாசனுக்கு ஏற்கனவே திருமணம் ஆகி 2011 ம் ஆண்டு விவாகரத்து ஆகிவிட்டது. இந்த விவரம் தெரிந்து தான் அவரை 25.04.2012 ல் திருமணம் செய்தேன் என்றால் சரிதான். வாசனை திருமணம் செய்த போது அவர் அரசு பள்ளியில் ஆசிரியராக பணி புரிந்து வந்தார் என்றால் சரிதான். நானும் இடைநிலை ஆசிரியராக பணி புரிந்து வந்தேன். எங்கள் திருணமத்திற்கு ஆன செலவுகளை வாதியும் எனது கணவரும் சேர்ந்து செய்தார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் தான் செய்தார். என் கணவரின் சட்ட வாரிசுகள் நானும் வாதியும் என்றால் சரிதான். திருமணம் ஆன பிறகு நாங்கள் அம்பத்தூரில் வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. ஆவடியில் தான் வசித்து வந்தோம். வழக்கு 1 மற்றும் 2 அட்டவணை

சொத்துகளை எனது கணவர் தான் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. வழக்கு 1 அட்டவணை சொத்தை எனது பெயரில் ஏற்கனவே இருந்த சொத்தை அடமானம் வைத்தும் கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றும் கிடைத்த பணத்தில் வாங்கினேன். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(இந்நிலையில் வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்க ஒத்திவைக்கப்படுகிறது)